2025 செப்டம்பர் மாதம் 16 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 124 /2024

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 – மணி |
| தகப்பனார் பெயர்: | முத்தையன் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காய்கறி வியாபாரம் |
| வயது : | 44 |

16.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:–

நான் தற்சமயம் போடிநாயக்கனூர், புதுக்காலனி, சுப்புராஜ் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 16.10.2023 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் போடிநாயக்கனூர், அண்ணாமலை பர்னிச்சர் அருகிலுள்ள தேவராஜ் பெட்ரோல் பல்க் அருகில் நின்று கொண்டிருந்தேன். அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. போடிநாயக்கனூர் நகர் காவல் நிலைய போலீசார் அங்கு வந்தார்கள். என் முன்னிலையில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைந்தார்கள். நான் அங்கு தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். சம்பவ இடத்தில் இரத்தம்பட்ட ஒரு டைல்ஸ் மற்றும் இரத்தம்படாத ஒரு டைல்சும் எடுத்து அத்தாட்சியில் தயார் செய்தார்கள். அந்த டைல்ஸ்கள் வெள்ளைக்கலரில் இருந்தன, அதில்

இரத்தம்படாத டைல்ஸ் **சா.பொ.3** மற்றும் இரத்தம்பட்ட டைல்ஸ் **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன விபரம் எழுதியிருந்தது என்ற எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், என்னுடைய கடையில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள், வெள்ளைத்தாளில் கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றும், காவல்நிலையத்தில் வைத்து தான் நான் கையொப்பம் செய்தும் சொன்னால் சரியல்ல. இரத்தம்பட்ட டைல்ஸ் மற்றும் இரத்தம்படாத டைல்ஸ் ஆகியவை பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து எதிரிகளுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி டைல்ஸ்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தை வைத்து தான் டைல்ஸ்கள் குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.16 18:22:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
16.09.2025

2025 செப்டம்பர்  மாதம் 16 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர்  :  124/2024

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 – பாண்டி |
| தகப்பனார் பெயர்: | அய்யன் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர் |
| வயது : | 42 |

16.09.2025

( 1 முதல் எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு  சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

நான் தற்சமயம் போடிநாயக்கனூர் நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.12.2023ம் தேதி போடிநாயக்கனூர் நகர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது, காவல் ஆய்வாளர் உத்தரவின்பேரில் போடிநாயக்கனூர் நகர் காவல்நிலைய குற்ற எண்.493/2023 பிரிவுகள் 294 பி, 307 இ.த.ச.ன்படியான வழக்கில் படிவம் 91ன் படி கைப்பற்றப்பட்ட  பொருட்களை போடிநாயக்கனூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து மதுரை தடய அறிவியல் கூடத்திற்கு ஒப்படைத்து

அறிக்கை செய்து காவல் நிலையம் திரும்ப வந்து, ஆஜரானேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எனது மேலதிகாரியின் உத்தரவின்படி படிவம் 91ன்படி கைப்பற்றப்பட்ட மற்றும் சீல் இடப்பட்ட பொருட்களை தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தேன்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.16 18:22:23 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
16.09.2025